பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 06 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 18வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக்கொள்கிறார்கள்.

2. நாட்டில் தேர்வுகள் தொடர்பாக நம்பிக்கையை ஏற்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பல்கலைக்கழக மானியக் குழு தெரிவித்துள்ளது.

3. கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் அருந்தி உயிரிந்தோர் எண்ணிக்கை 58ஆக அதிகரித்துள்ளது.

4. ரஷ்யாவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் திடீரென சுட்டத்தில் காவல்துறை அதிகாரிகள் 6 பேர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

18வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தொடரில் பதவியேற்றுக்கொள்கிறார்கள்.

அவர்களுக்கு இடைக்கால தலைவர் திரு. **Bhartruhari Mahtab** பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் வியாழக்கிழமை உரையாற்ற உள்ளார்.

மக்களவை தலைவர் தேர்தல் நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

மாநிலங்களவைக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் நீட் தேர்வு முறைகேடு, நெட் தேர்வு ரத்து, விலைவாசி உயர்வு, வேலையின்மை உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளை எழுப்ப திட்டமிட்டுள்ளனர்.

<<<<>>>>

நாட்டில் தேர்வு முறை மீதான நம்பிக்கையை ஏற்படுத்த மத்திய அரசு கடந்த சில நாட்களாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பல்கலைக்கழக மானியக் குழு தலைவர் திரு. **Mamidala Jagadesh Kumar** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசின் சமீபத்திய நடவடிக்கைகள் அமைந்துள்ளதாகக் கூறினார்.

தேர்வு முறையை வலுப்படுத்த பிரபல கல்வியாளர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை ஆக்கப்பூர்வமானது மட்டுமல்ல, தேவையான ஒன்று என்றும் தில்லி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் யோகேஷ் சிங் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாட, எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை இத்தகைய நடவடிக்கைகள் காட்டுவதாக அவர் கூறினார்.

அரசு மீது அனைவரும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவை ஒருநாள் இடைவெளிக்குப் பின்னர் இன்று மீண்டும் கூடுகிறது.

இன்று காலை கேள்வி நேரம் முடிந்தவுடன் முக்கியப் பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

சட்டப்பேரவையில் இன்று காலை உயர்கல்வித்துறை, பள்ளிக் கல்வித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளை அத்துறைகளுக்கான அமைச்சர்கள் தாக்கல் செய்கிறார்கள்.

மாலையில் சட்டம், செய்தி விளம்பரம் ஆகிய துறைகள் மீதான மானியக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

<<<<>>>>

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

செயிண்ட் லூசியாவில் இந்திய நேரப்படி இன்றிரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் தொடங்க உள்ளது.

இதுவரை தோல்வியே சந்திக்காத இந்திய அணி புள்ளிப் பட்டியலில் 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா பந்துவீச தீர்மானித்தது.

அதன்படி தற்போது விளையாடி வரும் வெஸ்ட் இண்டீஸ் அணி, 10 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 69 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான 3வது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற 3வது மற்றும் இறுதிப் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய தென்னாப்பிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 215 ரன் எடுத்தது.

216 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 40 புள்ளி 4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 220 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**